## அரை ஆண்டுக்கு முந்தைய தேர்வு -2023-24

**QUESTION NO-1**

**வகுப்பு: 12 பாடம்: பொருளியல் மதிப்பெண்கள் : 90**

**பகுதி – I**

**குறிப்பு : i) அனைத்து** வினாக்களுக்கும் விடை அளிக்கவும்.

ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்துஎழுதவும்.

1. பேரியல் பொருளாதாரம் என்பது பற்றிய படிப்பு.
அ. தனிநபர்கள் ஆ. நிறுவனங்கள் இ. நாடு ஈ. மொத்தங்கள்.

2. சமத்துவத்தின் தந்தையை கண்டுபிடி.
அ. ஜே .எம்.கீன்ஸ் ஆ. காரல் மார்க்ஸ்
இ. ஆடம்ஸ்மித் ஈ. சாமுவேல்சன்.

3. எவற்றைக் கூட்டி வருமான முறையில் தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது?
அ. வருவாய் ஆ. வரி இ. செலவு ஈ. வருமானம் .

4. மொத்த அளிப்பு சமம்___________
அ. C + I + G ஆ. C + S + G + (X – M ) இ. C + S + T +(X-M ) ஈ. C + S + T + Rf

5. கீன்ஸின் கோட்பாட்டில், பணத்திற்கான தேவையையும் பணத்தின் அளிப்பையும் நிர்ணயிப்பது ___________ ஆகும்.
அ. வட்டி வீதம் ஆ. விளைவுத்தேவை
இ. தொகுத்தேவை ஈ. தொகு அளிப்பு.

6. MEC என்ற கருத்துருவை அறிமுகப்படுத்தியவர் யார்?
அ) ஆடம் ஸ்மித் ஆ) J.M. கீன்ஸ் இ) ரிகார்டோ ஈ) மால்தஸ்.

7. காகிதப் பண முறையை மேலாண்மை செய்வது
அ) மைய பணவியல் அமைப்பு ஆ) மாநில அரசு
இ) மைய அரசு ஈ) வங் கிகள்.

8. பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளை ___அழைக்கின்றோம்.
அ) பூரிப்பு ஆ) பின்னிறக்கம்
இ) மீட்சி ஈ) வணிகச்சுழற்ச்சி

9. ஏ.டி.எம்.(ATM) என்பதன் விரிவாக்கம் என்ன ?
அ) தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம்
ஆ) சரி செய்து பணம் வழங்கும் இயந்திரம்
இ) தானாக பணம் வழங்கும் முறை
ஈ) எந்த நே ரமும் பணம் (Any Time Money)

10. கீழ்கண்டவற்றுள் வாணிகத்தை தீர்மானிக்கும் காரணி எது?
அ. ஒரு பொருளின் மேம்பாட்டு கால கட்டம் ஆ. உற்பத்தி காரணிகளின் ஒப்பீட்டு விலை இ. அரசாங்கம் ஈ. மேற்கண்ட அனைத்தும்.

11. கீழ்கண்டவைகளில் எவை வெளிநாட்டு நேரடி மூலதனத்திற்கான உதாரணமாக கூற முடியாது?
அ. வெளிநாட்டில் தன்னூர்தி ஆலை அமைத்தல்
ஆ. வெளி நாட்டில் செயல்பட்டுக்கொண்டிருக்கிற இரும்பு உருக்கு ஆலையை வாங்குதல்
இ. வெளிநாட்டு துணி நிறுவனம் வெளியிட்ட பங்கு அல்லது கடன் பத்திரத்தை வாங்குவது
ஈ. முழு தனி உரிமையுடன் ஒரு புதிய நிறுவத்தை வெளிநாட்டில் தொடங்குவது.

12. சிறப்பு எடுப்பு உரிமையின் மற்றொரு பெயர்
அ) தாள் தங்கம் ஆ) பங்களவுகள்
இ) தன் விருப்ப ஏற்றுமதி தடை கள் ஈ) இவை ஏதுமில்லை

13. பத்தாவது பிரிக்ஸ் அமைப்பின் உச்சி மாநாடு ஜுலை 2018ல் நடைபெற்ற இடம்
அ) பீஜிங் ஆ) மாஸ்கோ இ) ஜோகனஸ் பர்க் ஈ) பிரசிலியா.

14. GST இதற்கு சமம்?
அ) விற்பனை வரி ஆ) தொ ழிற்குழும வரி
இ)வருமான வரி ஈ) உள்ளாட்சி வரி.

15. கீழே கொடுக்கப்பட்டுள்ள வற்றில் எது இந்தியாவில் பெரிய பற்றாக்குறையாக இருக்கும்?
அ) வருவாய் பற்றாக்குறை ஆ) வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை
இ) நிதிப் பற்றாக்குறை ஈ) முதன்மைப் பற்றாக்குறை.

16. கார்பன் மேனாக்சைட் அதிகமாவதில் பங்களிப்பைச் செய்வது
அ) மோட்டார் வாகனங்கள் ஆ) தொழில் செயற்பாடுகள்
இ) நிலையாக எரிபொருள் எரிக்கும் கருவிகள்
ஈ) மேற்சொன்ன எதுவுமில்லை

17. உலக வெப்பயமயமாதல் ------என்றும் குறிப்பிடப்படுகிறது.
அ) சூழலியல் மாறுபாடு ஆ) பருவநிலை மாறுபாடு
இ) வளிமண்டல மாறுபாடு ஈ) மேற்சொன்ன எதுவுமில்லை

18. கீழ்கண்டஎந்ததிட்டத்தில், வேளாண்மைமற்றும் கிராமப் பொருளாதாரத்தை மையமாகக் கொண்டது?
அ) மக்கள் திட்டம் ஆ) பாம்பேதிட்டம்
இ) காந்தியத் திட்டம் ஈ) விஸ்வேசுவரய்யாதிட்டம்

19. முன்னோக்குத் திட்டத்தின் மற்றொருப் பெயர்________.
அ) குறுகிய கால திட்டமிடல் ஆ) நடுத்தரக்காலத் திட்டமிடல்
இ) நீண்ட காலத் திட்டமிடல் ஈ) இவை எதுவுமில்லை.

20. பொருளாதார அளவையியல் என்ற வார்த்தையை உருவாக்கியவர்?
அ) ஃபிரான்ஸி கால்டன் ஆ) ராக்னா; ஃபிரிஸ்க்
இ) கார்ல்பியர்சன் ஈ) ஸ்பியர்மேன்

## பகுதி – II

**குறிப்பு** : ஏதேனும் **7** வினாக்களுக்கு விடையளிக்கவும்.
**வினா எண் 30**க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

21. முதலாளித்துவம் என்றால் என்ன?
22. GDP குறைப்பான்இலக்கணம் தருக.
23. தொகு அளிப்பின் கூறுகள் யாவை ?
24. இறுதி நிலைநுகர்வு நாட்டம் (MPC) - வரையறு.
25. பண்டப்பணம் என்றால் என்ன ?
26. வணிக வங்கிகள் என்பதனைவரையறு.
27. பன்னாட்டு வாணிகம் வரை விலக்கணம் தருக.
28. GST யின் கூறுகள் யாவை ?
29. மொத்த நாட்டு உற்பத்தி என்றா ல் என்ன ?
30. பொருளாதார அளவையியல் என்றால்என்ன?

## பகுதி – III

**குறிப்பு** : ஏதேனும் **7** வினாக்களுக்கு விடையளிக்கவும்.
**வினா எண் 40**க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

31. பொருளாதார அமைப்புகளின் வகைகளை குறிப்பிடுக.
32. காரணி செலவில் NNP – விவரி.
33. கீன்ஸின் நுகர்வு சார்ந்தஉளவியல் விதியின் கருத்துகளைக் கூறுக
34. பண அளிப்பு என்றால் என்ன ?
35. பணச்சந்தையையும், மூலதனச் சந்தையையும் வேறுபடுத்துக.
36. வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் நோக்கங்களை குறிப்பிடுக
37. பிரிக்ஸ் மாநாடு 2018ன் நிகழ்ச்சி நிரல் பற்றி எழுதுக.
38. நவீன அரசின் பணிகள் யாவை ?
39. பொருள்சார் சமநிலை அணுகுமுறையின் பொருள் குறிப்பிடுக.
40. வறுமையின் நச்சு சுழற்சிக்கான காரணங்களை வரைபடத்துடன் தெளிவுப்படுத்துக

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்கவும்.**

41. **அ)** பேரினப்பொருளியலின்பரப்பெல்லையைவிவரி.

**அல்லது**

41. **ஆ)** தேசிய வருவாய் கணக்கிட்டில் உள்ள சிரமங்கள் யாவை ?

42. **அ)** தொன்மைக்கோட்பாடு மற்றும்கீன்ஸ் கோட்பாடு ஆகியவற்றிற்கு இடையிலான வேறுபாடுகளை விளக்குக.

**அல்லது**

42. **ஆ)** மூலதனத்தின் இறுதிநிலை உற்பத்தித் திறனுக்கும் (MEC) முதலீட்டின் இறுதிநிலை உற்பத்தி திறனுக்கும் (MEI) உள்ள வேறுபாடுகள் யாவை ?

43. **அ)** ஒரு பொருளாதாரத்தில் பணவீக்கத்திற்கான காரணங்கள் மற்றும் விளைகள் யாவை?

**அல்லது**

43. **ஆ)** வணிக வங்கிகளின் பணிகளை விளக்குக.

44. **அ)** பொருளாதார முன்னேற்றம் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீட்டிற்கும் இடையே உள்ள தொடர்பினை விளக்குக.

**அல்லது**

44. **ஆ)** பன்னாட்டுப் பணநிதியத்தின் நோக்கங்களை விளக்குக.

45. **அ)** அரசுச் செலவு அதிகரிப்புகளுக்கான காரணங்கள் யாவை ?.

**அல்லது**

45. **ஆ)** நீடித்த அல்லது வளம்குன்றா வளர்ச்சி முக்கியத்துவம் மற்றும் அதன் நோக்கங்களை விளக் குக.

46. **அ)** பொருளாதார முன்னேற்றத்தை தீர்மானிக்கும் பொருளாதாம் சார்ந்த காரணிகளை விவாதிக்கவும்

**அல்லது**

46. **ஆ)** புள்ளியியலின் இயல்பு மற்றும் எல்லைகளை விளக்குக.

47. **அ)** நிதிக் கொள்கைகளின் கருவிகள் எவை ? விளக்குக.

**அல்லது**

47. **ஆ)** பின்வரும் விவரங்களுக்கு கார்ல்பியர்ஸனின் ஒட்டுறவுக்கெழுவினை கண்டறிக

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேவை X | 23 | 27 | 28 | 29 | 30 | 31 | 33 | 35 | 36 | 39 |
| விற்பனைY | 18 | 22 | 23 | 24 | 25 | 26 | 28 | 29 | 30 | 32 |